**Minutes of Public Hearing conducted on 02.12.2025 at 10.00 A.M. at Hindu Nadar Uravin Murai Thirumana Mandapam, Keelasurandai, V.K Pudur Taluk, Tenkasi District with respect to the proposed project of Rough Stone and Gravel Quarry by Thiru.N.H.M.Pandian, over an extent of 3.01.00 Hect at S.F. No. 302/1, 304/1A & 304/2A, Anaikulam Village, Veerakeralampudur Taluk, Tenkasi District.**

**Details of participants in this meeting.**

| | | |
|---|---|---|
| 1. | Thiru. S.Muthuramalingam | District Backward Classes and Minorities Welfare Officer, Tenkasi. |
| 2. | Tmt. S.R. Sangeeta | District Environmental Engineer (FAC), Tamilnadu Pollution Control Board, Tenkasi. |
| 3. | Thiru. M.Tamizh Selvan | Assistant Engineer, Tamil Nadu Pollution Control Board, Tenkasi. |
| 4. | Selvi. M. Shanmugasree Revathi | Assistant Engineer, Tamil Nadu Pollution Control Board, Tenkasi. |
| 5. | Public and Government Officials | Details are enclosed vide Annexure - II |

The Public hearing under EIA Notification, 2006 for the proposed project of Rough Stone and Gravel Quarry by Thiru.N.H.M.Pandian,, over an extent of 3.01.00 Hect at S.F. No. 302/1, 304/1A & 304/2A of Anaikulam Village, Veerakeralampudur Taluk, Tenkasi District was conducted on 02.12.2025 at 10.00 A.M. at Hindu Nadar Uravin Murai Thirumana Mandapam, Keelasurandai, V.K Pudur Taluk, Tenkasi District.

The District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Tenkasi welcomed the District Backward Classes and Minorities Welfare Officer, Tenkasi, Government officials, industry representatives and the public. She informed that public notices were already published in “Dinamalar” Tamil edition & “The New Indian Express” English edition on 25.10.2025 and also announcement regarding public hearing was made to the public / villagers located on closer proximity of proposed quarry site through vehicle announcement and distributing pamphlets. She informed that the Environmental consultant will present the technical

details of the proposed project on behalf of the Project proponent and after the presentation, the public can express their views on the proposed project after introducing themselves. She also stated that the public hearing is being recorded through videography and the verbal / written views of the public will be sent to the State Environment Impact Assessment Authority (SEIAA), Chennai.

The District Backward Classes and Minorities Welfare Officer, Tenkasi added that this Public hearing was actually scheduled to be chaired by the Sub Collector, Tenkasi and due to sudden video conference meeting scheduled by the Election Commission of India, the Sub Collector, Tenkasi could not attend the public hearing. He also stated that as per the Dirstrict Collector's instruction, he chaired the public hearing on behalf of the Sub Collector, Tenkasi.

Then the Environmental Consultant explained in detail about the project of Thiru.N.H.M.Pandian Rough stone and gravel quarry to the public through a power point presentation.

Subsequently, the District Environmental Engineer requested the public to express their views about the proposed project orally after introducing themselves. Subsequently, the public expressed their views with respect to the proposed project as follows:

1. **Thiru. M. Kalil Rahuman, Former Panchyat President and President of Parent Teacher's Association, Government Higher Secondary School, Anaikulam**

   He said that if this project is permitted, it will be beneficial for the labourers of the quarry, Tipper truck operators and Construction workers. It will be helpful for construction of bitumen roads. He stated that people here are poor and also requested to grant permission for the quarry and so that not to push the public into further poverty. Further he added that majority of the students studying in Anaikulam Government Higher Secondary school were girls and hence requested to give oral instructions to the project proponent to construct sanitary facilities.

2. **Thiru. Selvakumar, Sundrapandiyapuram**

   He said that for prolonged time he was working as Hitachi (Excavator) operator residing at out station for works. Since he was residing out of station,

he was not able to look after his family. If this project is permitted, he will be employed locally with his family. He also added that it will also benefit his friends residing locally to work in quarry.

3. **Thiru. Antonysamy, Kurinchanpatti**

He said that he is a driver and major business here is agriculture activities. He also stated that he has to reside at outstations for his work and if the project is permitted, he will get employment.

4. **Tmt. Jebakani, Ramanathapuram District**

She said that this quarry would improve the livelihood of all the people and the basic facilities such as education, drinking water, roads, medical facilities, and cattle rearing would all enhance the living standards of the public. Therefore, She requested to issue no objection certificate for the proposed quarry project.

5. **Thiru. M.Snabaga Antony, Panchayat President, Vadiyur**

He said that the proposed quarry site is located 8 Kilometers away from his village and when stones were not available in the quarry, he would travel to Athiyuthu village to buy quarry stones. This travel distance increases the cost of raw materials. He stated that if this quarry is permitted in this area, it would be greatly beneficial to the general public. He also said that although there are quarries functioning around their village, their panchayat does not receive any revenue from them, as all the income goes to the nearby municipality. Therefore, he requested that arrangements be made for their panchayat to receive at least 10 percent of the amount paid to the government by the quarries.

Then, the District Environmental Engineer, Tenkasi requested if public opinion to be made if any and also requested the public to submit the written petitions, if any. A total of about 64 petitions were received during the public hearing.

Then, the District Environmental Engineer, Tenkasi informed that the written suggestions / views received during the public hearing will be forwarded to the State Environment Impact Assessment Authority (SEIAA), Chennai.

As no public came forward to record their views, she thanked everyone and the meeting came to an end.

| | |
|---|---|
| **District Environmental Engineer(FAC),**<br>**TamilNadu Pollution Control Board,**<br>**Tenkasi** | **District Backward Classes and Minorities**<br>**Welfare Officer,**<br>**Tenkasi.** |

**Annexure:**

1. Press release Notice (Tamil & English) **( Annexure I )**
2. Copy of Attendence (Total - 10 Pages, 91 Participants) **( Annexure II )**
3. Pendrive consisting of the Recorded Video of the entire public hearing. **(Annexure III )**
4. Written Petition received from the public for this proposed Project- 64 Nos **(Annexure IV )**

**தென்காசி மாவட்டம், வீரகேரளம் புதூர் வட்டம், ஆணைக்குளம் கிராமம், புல எண்கள். 302/1, 304/1A மற்றும் 304/2A , விஸ்தீரணம் 3.01.00 ஹெக்டேர் பரப்பளவில் அமையவுள்ள திரு. N.H.M. பாண்டியன் கல் மற்றும் கிராவல் குவாரி திட்டம் குறித்து 02.12.2025 அன்று காலை 10.00 மணியளவில், தென்காசி மாவட்டம், வீரகேரளம் புதூர் வட்டம், கீழச்சுரண்டை கிராமம், தி/ள். இந்து நாடார் உறவின்முறை திருமண மண்டபத்தில் வைத்து நடைபெற்ற பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தின் குறிப்புகள்.**

**இக்கூட்டத்தில் பங்கு பெற்றவர்களின் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. S. முத்துராமலிங்கம் | - | மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், தென்காசி. (மாவட்ட ஆட்சியரின் உத்திரவின்படி) |
| 2 | திருமதி. S.R. சங்கீதா | - | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்(முழு கூடுதல் பொறுப்பு), தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தென்காசி |
| 3. | திரு. மு. தமிழ் செல்வன் | - | உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தென்காசி |
| 4. | செல்வி. மு. சண்முகஸ்ரீ ரேவதி | | உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தென்காசி |

5. பொதுமக்கள் மற்றும் அரசு அதிகாரிகள் (விபரம் இணைக்கப்பட்டுள்ளது-இணைப்பு II)

*****

தென்காசி மாவட்டம், வீரகேரளம் புதூர் வட்டம், ஆணைக்குளம் கிராமம், புல எண்கள். 302/1, 304/1A மற்றும் 304/2A -ல் விஸ்தீரணம் 3.01.00 ஹெக்டேர் பரப்பளவில் அமையவுள்ள திரு. N.H.M. பாண்டியன் கல் மற்றும் கிராவல் குவாரிக்கு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையின் கீழ் அப்பகுதி பொதுமக்களின் கருத்தினை அறிய பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டமானது, தென்காசி மாவட்டம், வீரகேரளம் புதூர் வட்டம், கீழச்சுரண்டை கிராமம், தி/ள். இந்து நாடார் உறவின்முறை திருமண மண்டபத்தில் வைத்து 02.12.2025 அன்று காலை 10.00 மணியளவில் துவங்கியது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தென்காசி அவர்கள் பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு தலைமையேற்க வருகை புரிந்த

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், தென்காசி அவர்களையும், அரசு அதிகாரிகளையும் மற்றும் கருத்துக் கேட்பு கூட்டத்திற்கு பங்கேற்க வந்துள்ள பொதுமக்கள் அனைவரையும் வரவேற்றார். மேலும் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் குறித்து, ஏற்கனவே 25.10.2025 நாளிட்ட "தினமலர்" மற்றும் "நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்ததாகத் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து குவாரி அமையும் இடத்தினை சுற்றியுள்ள கிராம மக்களுக்கு, துண்டு பிரசுரங்கள், வாகன பிரச்சாரம் மூலம் அறிவிப்பு செய்யப்பட்டிருந்தாகவும் தெரிவித்தார்.

இத்திட்டம் தொடர்பான விளக்கங்களை, மேற்படி நிறுவனம் சார்பில் அவர்களின் சுற்றுச்சூழல் ஆலோசகர் பொதுமக்களிடம் விளக்குவார்கள் எனவும், அதனைத் தொடர்ந்து பொதுமக்கள் ஒருவர் பின் ஒருவராக தங்களுடைய பெயர் மற்றும் ஊரினை விபரமாக தெரிவித்து, கருத்துக்களை தெரிவிக்குமாறு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் கேட்டுக்கொண்டார். பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை வாய்மொழியாகவோ, எழுத்துப்பூர்வமாகவோ தெரிவிக்கலாம் எனவும், இக்கூட்டம் வீடியோகிராபி மூலம் பதிவு செய்யப்படுகிறது என்றும், பதிவு செய்யப்பட்ட கருத்துக்கள் அனைத்தும் இக்கூட்டத்தின் குறிப்புகளுடன் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு தக்க நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து பேசிய மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், தென்காசி அவர்கள், இந்த பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டமானது தென்காசி சார் ஆட்சியர் தலைமையில் நடைபெறுவதாக இருந்தது எனவும், இன்று நடைபெற உள்ள வாக்காளர் சிறப்பு காணொலியில் சார் ஆட்சியர் அவர்கள் கலந்து கொள்ள வேண்டியிருப்பதால், மாவட்ட ஆட்சியரின் ஆணையின்படி தாம் இந்த கூட்டத்தை தலைமை ஏற்று நடத்துவதாக தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, திரு. N.H.M. பாண்டியன் கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் ஆலோசகர், இத்திட்டம் தொடர்பாக புள்ளி விளக்க காட்சி (Power Point Presentation) மூலம் பொதுமக்களுக்கு விளக்கினார்.

அதனைத் தொடர்ந்து மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், பொதுமக்கள் ஒருவர் பின் ஒருவராக தங்களுடைய பெயர் மற்றும் ஊரினை விபரமாக தெரிவித்து, கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து, இத்திட்டம் குறித்து பொதுமக்களால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் பின்வருமாறு:

1. திரு. M. கலீல் ரகுமான், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர், ஆணைகுளம் மற்றும் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர், (அரசு மேல் நிலைப்பள்ளி,ஆணைக்குளம்)

இத்திட்டத்திற்கு அனுமதி அளித்தால், கல்குவாரியில் வேலை செய்யும் தொழிலாளர்கள், டிப்பர் லாரி ஓட்டுபவர்கள், கட்டிட வேலை செய்பவர்கள் ஆகிய அனைவரும் பயன் பெறுவார்கள். மேலும் தார் சாலைகள் அமைத்திட பேருதவியாக இருக்கும். ஏழ்மையில் இருக்கும் தங்களை வறுமையில் தள்ளிவிடாமல் இருக்க இந்த குவாரிக்கு அனுமதி வழங்க வேண்டும் என கேட்டுக் கொண்டார். மேலும் ஆணைக்குளம் அரசு மேல் நிலைப்பள்ளியில் பெரும்பாலும் பெண் குழந்தைகள் கல்வி பயின்று வருவதாகவும், எனவே பெண் குழந்தைகளின் அடிப்படை தேவை கருதி அவர்களுக்கு சுகாதர வசதிகளை இந்நிறுவனம் சார்பில் அமைத்து தருவதற்கு வாய்மொழி உத்தரவு வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

2. திரு. செல்வகுமார், சுந்தரபாண்டியபுரம்.

தாம் நீண்ட காலமாக Hitachi ஆப்பரேட்டராக பணிபுரிந்து வருவதாகவும், வெளியூரில் தங்கி தான் வேலை செய்து வருவதாகவும் தெரிவித்து, வெளியூரில் தங்கி வேலை செய்வதால் தம்முடைய குடும்பத்தை சரிவர கவனிக்க இயலவில்லை எனவும், இக்குவாரி அமையும் பட்சத்தில் தான் வெளியூர் சென்று வேலை பார்க்க வேண்டிய அவசியம் இல்லாமல் உள்ளூரிலேயே வேலை செய்து விட்டு தனது குடும்பத்துடன் சேர்ந்து வாழ வசதியாக இருக்கும் எனவும் தெரிவித்தார். மேலும் தம்முடைய சக நண்பர்களும் உள்ளூரில் வேலை செய்வதற்கு வாய்ப்பாக அமையும் எனவும் தெரிவித்தார்.

3. திரு. அந்தோணிச்சாமி, குறிஞ்சான்பட்டி

தாம் ஓட்டுநராக பணிபுரிந்து வருவதாகவும், இந்தப் பகுதியில் பொதுவாக விவசாயம் தான் முக்கிய தொழிலாக நடைபெறுகிறது எனவும் தெரிவித்தார். பெரும்பாலும் வெளியூரில் தங்கி வேலை செய்ய வேண்டிய சூழல் தனக்கு உள்ளதாகவும் கூறினார். மேலும் இந்தப் பகுதியில் குவாரி அமையும் பட்சத்தில் தனக்கு வேலை கிடைக்கும் எனவும் கூறினார்.

4. திருமதி. ஜெபக்கனி, இராமநாதபுரம் மாவட்டம்.

தாம் நெடுங்காலமாக தன்னார்வலராக பணிபுரிந்து வருவதாகவும், இந்தக் கல்குவாரியால் மக்கள் அனைவருடைய வாழ்வாதாரம் உயரும் எனவும் அடிப்படை வசதிகளான கல்வி, குடிநீர், சாலை, சுகாதர வசதி மற்றும் கால் நடைகள் வளர்ப்பு இவைகள் அனைத்துமே பொதுமக்களின் வாழ்வாதரத்தை உயர்த்தும் எனவும், எனவே

அமையவுள்ள கல்குவாரிக்கு தடையில்லா சான்று வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

5. <u>திரு. எம்.சினாபக அந்தோணி, ஊராட்சி மன்றத் தலைவர், வாடியூர்</u>

அமையவுள்ள குவாரியானது தம்முடைய கிராமத்தில் இருந்து சுமார் 8 கி.மீ தொலைவில் அமைந்துள்ளதாகவும், மற்ற குவாரிகளில் கற்கள் இல்லாத சமயம் தாங்கள் அத்தியூத்து கிராமத்திற்கு சென்று கற்கள் வாங்க வேண்டியுள்ளதாகவும், அதனால் மூலப் பொருட்களின் விலை உயர்ந்து விடுவதாகவும், இந்தப் பகுதியில் குவாரி அமையும் பட்சத்தில் பொதுமக்களுக்கு பெரிதும் பயன்படும் வகையில் இருக்கும் எனவும் தெரிவித்தார். மேலும் தங்கள் ஊரினை சுற்றி குவாரிகள் அமைந்திருந்தாலும் தங்கள் ஊராட்சிக்கு வருமானம் ஏதும் வராமல் தான் உள்ளது எனவும் அருகில் உள்ள நகராட்சிக்கு வருமானம் அனைத்தும் சென்று விடுகிறது என்றும் எனவே தங்கள் ஊராட்சிக்கும் குவாரிகள் அரசுக்கு செலுத்தும் தொகையில் குறைந்த பட்சம் 10 சதவீதம் தொகை கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர், தென்காசி அவர்கள் பொதுமக்கள் யாரேனும் கருத்துக்கள் ஏதும் கூற விரும்பினால் கூறலாம் என தெரிவித்து, எழுத்துப்பூர்வமான மனுக்கள் ஏதேனும் அளிப்பதாக இருந்தால், இக்கூட்டத்தில் அளிக்கலாம் என்று கூறியதைத் தொடர்ந்து மொத்தம் 64 மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டது.

இறுதியில், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தென்காசி அவர்கள் கூட்டத்தில் பதிவு செய்யப்பட்ட கருத்துக்கள் அனைத்தும் சென்னையிலுள்ள மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பிட்டு ஆணையத்திற்கு தக்க நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிவித்தார். பொதுமக்கள் வேறு ஏதும் கருத்துக்கள் தெரிவிக்காததால் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறியவுடன், பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் நிறைவு பெற்றது.

11/2/25

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,(முகூபொ),
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
தென்காசி.

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்,
தென்காசி.

57

**இணைப்புகள்:**

1. பத்திரிக்கைச் செய்தி நகல்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) **(இணைப்பு I).**
2. வருகைப்பதிவேடு நகல் (மொத்தம் - 10 பக்கங்கள், 91 நபர்கள்) **(இணைப்பு II)** .
3. பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் வீடியோ (ஒலி மற்றும் ஒளி) பதிவு **(இணைப்பு III).**
4. கருத்து கேட்பு கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து எழுத்துப்பூர்வமாக பெறப்பட்ட மனுக்கள் - 64 எண்ணங்கள்**(இணைப்பு IV).**